பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,

சென்னை – 28.

சுற்றறிக்கை

எண்.15137/ C1 / 2020, நாள்.19.08.2021.

பொருள் : சுற்றறிக்கை – தற்காலிக பற்றுகை ஆணை –வருமானவரிச் சட்டம் 1961 பிரிவு 132(9C) மற்றும் 281B(2) அடிப்படையில் அசையாச் சொத்து மீது தற்காலிக பற்றுகை ஆணை பிறப்பிக்கப்படுதல் – பதிவுச் சட்டப் பிரிவு 89(2A)– ன் கீழ் கோர்வை மற்றும் அட்டவணை செய்தல் – பற்றுகை செய்யப்பட்ட சொத்துகள் குறித்த பதிவு ஆவணங்களில் பற்றுகை ஆணை விபரம் அட்டவணை செய்தல் – பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக தற்காலிக பற்றுகை ஆணை காலக்கெடு முடிவுக்குப் பின் தொடர் ஆவணங்கள் பதிவு செய்திட 09.04.2021–ல் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது – சுற்றறிக்கையின் செயலாக்கத்தினை மறு ஆணை பிறப்பிக்கும்வரை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மற்றும் தொடர் ஆவணப் பதிவுக்கு சுற்றறிக்கைக்கு முன்னர் கடைபிடித்த நடைமுறைகளை பின்பற்றிட தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை : 1. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்.15137/சி1/2020, நாள். 09.04.2021.

2. Commissioner of Income Tax (Admin & TPS) letter No. CHE/Coord/101(80)/Judl/2021–22, Dated.05.08.2021/

3. அரசு செயலர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை கடித எண்.8762–A/J2/2020–6, Dated.17.08.2021.

*****

பொருளில் கண்டபடி பார்வை –2 மற்றும் 3–ல் கண்ட கடிதங்களுக்கு இணங்க பார்வை –1–ல் கண்ட சுற்றறிக்கையின் செயலாக்கத்தினை மறு ஆணை பிறப்பிக்கும்வரை உடனடியாக நிறுத்தி வைத்திட இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. எனவே பொருள் தொடர்பாக கீழ்கண்ட நடைமுறையினை தொடர்ந்து கடைபிடித்திட அனைத்து பதிவு அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

Verified RegEstate

1. பொருளில் கண்டபடி வருமானவரி சட்டப்பிரிவுகளின்படி தற்காலிக பற்றுகை செய்யப்பட்ட ஆவணச் சொத்துக்கள் குறித்த அட்டணை –2–ல் தற்போது நடைமுறையில் உள்ளவாறு பற்றுகை ஆணை குறித்த உரிய குறிப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

2. தற்காலிக பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக தொடர் ஆவணப் பதிவுகள் மேற்கொள்ள ஆவணம் ஏதும் பதிவுக்கு தாக்கல் செய்யப்படின் தற்காலிக பற்றுகை ஆணை நடைமுறையில் இருந்தாலும் அல்லது தற்காலிக பற்றுகை ஆணையின்படி பற்றுகைக்கான காலக்கெடு முடிவடைந்திருந்தாலும் சம்பந்தப்பட்ட வருமானவரித் துறையினரிடமிருந்து உரிய தடையின்மைச் சான்று (NOC) பெற்று தாக்கல் செய்திட ஆவணதாரர்களிடம் அறிவுறுத்திட கோரப்படுகிறது.

3. எனவே, தற்காலிக பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வருமானவரித்துறையின் உரிய தடையின்மைச் சான்றில்லாமல் (NOC) தொடர் ஆவணப்பதிவுக்கு பெறப்படும் ஆவணங்களை உரிய தடையின்மைச் சான்று பெற்று வழங்கிடக்கோரி ஆவணதாரர்களுக்கு 'Check Slip' அளித்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

4. இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நடைமுறைகள் தவறாது கடைபிடிக்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்திட மாவட்ட பதிவாளர்களும் மற்றும் துணை பதிவுத்துறை தலைவர்களும் கோரப்படுகிறார்கள். மேலும் இந்தச் சுற்றறிக்கை பெற்றதற்கான ஒப்புதலை அனைத்து சார்பதிவாளர்களிடமிருந்தும் மாவட்ட பதிவாளர்களும் மாவட்ட பதிவாளர்களிடமிருந்து துணை பதிவுத்துறை தலைவர்களும் பெற்று கோர்வை செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும்,துணை பதிவுத்துறை தலைவர்கள் தங்களின் ஒப்புதலை பதிவுத்துறை தலைவருக்கு அனுப்ப கோரப்படுகின்றனர்.

ஒம்/–19.08.2021

பதிவுத்துறை தலைவர்

/ ஆணையின்படி /

19/8/21

கூடுதல் பதிவுத்துறை தலைவர்

(முத்திரை மற்றும் பதிவு)

19/8/21

Verified RealEstate™

பெறுநர்:

அனைத்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள்

அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்

அனைத்து பதிவு அலுவலர்கள்

(குறிப்பு : பார்வை 1–ல் கண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலோ மேலும் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தொடர் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலோ அது தொடர்பான விபரங்களை சார்பதிவாளர் அலுவலக வாரியாக உரிய வில்லங்கச் சான்று நகலுடன் மாவட்ட பதிவாளர்கள் தத்தமது எல்லைக்குட்பட்ட சார்பதிவகங்களைப் பொறுத்து சிறப்பு அறிக்கையினை இச்சுற்றறிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து ஐந்து தினங்களில் இவ்வலுவலகத்திற்கு தவறாது அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.)

நகல்

1. மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
2. அரசுச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
3. முக்கிய ஆணைக்கோப்பு.

Verified RealEstate

Verified RealEstate™